**தமிழ் மொழி இலக்கியத்துறை,**
**அருள் ஆனந்தர் கல்லூரி(தன்னாட்சி),**
**கருமாத்தூர், மதுரை - 625 514.**

## ***2019– 2020 தமிழ்த்துறைச் செயல்பாடுகள்***

1. 13.9.2019 முதல் 14.9.2019 வரை படைப்பாக்கப் பயிற்சி நடைபெற்றது. இதில் கவிதை குறித்துத் திண்டுக்கல் அனுக்கிரகா சமூகவியல் கல்லூரியின் உதவிப் பேராசிரியர் பேரா. சலோ அவர்கள் பயிற்சி அளித்தார். ஓவியம் குறித்து மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் உதவிப் பேராசிரியர் பேரா. இரவிக்குமார் அவர்கள் பயிற்சி அளித்தார். பேச்சு குறித்துத் திருநெல்வேலியைச் சார்ந்த பேச்சாளர் அருள் ஜீவா அவர்கள் பயிற்சி வழங்கினார்.
2. 6.12.2019 அன்று குறும்படத் திரையிடலும் விவாதமும் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஆவணப்பட இயக்குனர் திரு. இரவி சுப்பிரமணியன் அவர்களும் குறும்பட இயக்குனர் திரு. திவ்ய பாரதி அவர்களும் கலந்துகொண்டனர்.
3. 2892019 அன்று சாரல்- நாடக விழா நடைபெற்றது.
4. 11.9.2019 அன்று சிந்தனைக்களத்தின் சார்பாக அருள் ஆனந்தர் கல்லூரியின் தமிழ்த்துறைப் பேராசிரியர் பேரா. ச. விஜய் அவர்கள் ”பாரதி - அகமும் புறமும்” என்னும் தலைப்பில் உரையாற்றினார்.